தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-[?] | தி. பி. 2016 | மீனம் 4 | (16-3-1986) | 65 காசுகள் | [இதழ் எண் 70] | [பகுதி 1-4

தமிழ் மொழியை, அதன் எழுத்துகளைப் பண்பாட்டை, இலக்கியங்களைக் காக்கவேண்டும் என்பதே எங்கள் கொள்கை!

தென்மொழி, தமிழ்நிலம் ஆகியவற்றை அவற்றுக்காகவே நடத்திவருகிறோம்!

தமிழரின் கடந்தகால வரலாற்றுப் பெருமைகளையும், அவர்களின் படிமுறை வளர்ச்சியையும், அவர்களுக்கு அறிவிப்பதும், அவற்றை அழிக்கின்ற பிற இனத்தவரின் ஊடுருவல்களையும், ஆக்கங்களையும் தடுத்து எங்கள் மொழி, இன அழிவுகளைக் காப்பதுமே எங்கள் கடமையாகக் கொண்டிருக்கிறோம்!

இவற்றுக்கு ஆக்கமான கருத்துகளே எங்கள் இதழ்களில் வெளியிடப் பெறுகின்றன!

இதைத்தவிர தமிழரல்லாத பிறருடைய உணர்வுகளைப் புண்படுத்த வேண்டும் என்பது எங்கள் நோக்கமன்று!

எங்கள் மக்களின் நலன்களையும், மொழி நலத்தையும், காக்க விரும்பும் எங்கள் தொண்டு, எவ்வகையிலும் சட்டத்திற்கோ, அரசுக்கோ புறம்பானதன்று!

இதற்காக எங்கள் மேலும், எங்கள் இதழ்கள் மேலும் நடவடிக்கை எடுப்பது வளமான குடியரசு அமைப்புக்கு நலமானதன்று!

நடுவண் அரசின் குற்றச்சாட்டுக்குப் பாவலரேறுவின் விடை!

கடந்த 1-2-1986 அன்று நடுவணரசு உள்துறை அமைச்சர் சார்பாக, இந்திய செய்தித்தாள் ஆட்சிக் குழுவுக்கு பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், தம வழக்கறிஞர் குழுவைக் கலநது கொண்டு, சென்ற 12-2-1986 அன்று, கீழ்க்காணும் விடையை ஒப்பம் பெற்று பதிவஞ்சல் (Registered Letter with Acknowledgment Due) வழியாக அனுப்பி வைத்துள்ளார்.

அம் மடலின் தமிழ்ப் பெயர்ப்பு வாசகம் கீழ் வருமாறு:

விடை என்கிற வடிவின் எழுத்து மூலம்.

ஐயா,

27-1-1986 ஆம் நாளிட்டு எங்களுக்கு விடுக்கப்பெற்ற உங்களின் காரணம் காட்டு அறிக்கையினை, 1-2-1986 அன்று பெற்றுக்கொண்டோம். உங்கள் அன்பான முடிவுக்கு எங்களின் விடையைத் தர விரும்புகிறோம்.

உங்களின் காரணம் காட்டு அறிக்கைபின்படி, எங்கள் கிழமை, மாத இதழ்களில் வெளியான 12 வரையறுத்த செய்திகளுக்கு நாங்கள் கூறவிரும்பும் விடைகள் இவை:

தமிழில் வெளிவந்து கொண்டிருக்கும் எங்கள் இதழ்களை நாங்கள் விரும்பி வெளிப்படுத்துவதே, அவற்றால், தமிழர்களை முன்னேற்றவும், அவர்களுக்கு அறிவு புகட்டவும்; அவர்தம் நலன்களைக் காப்பதோடு தமிழ் மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் இலக்கியங்கள், தமிழ் எழுத்துகளைப் பாதுகாப்பதற்காகவுமே என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். நாங்கள் வெளியிடும் 'தமிழ்நிலம்' கிழமை இதழும், 'தென்மொழி' மாத இதழும் இவ்வகைக் கருத்துகளின் அடிப்படையிலேயே தமிழர்கள் தம் கடந்த வரலாற்றுப் பெருமையையும், அவர்களின் வளர்ச்சியையும் அவர்களுக்கு எடுத்துக் கூறுவதோடு, பிற வெளிநாட்டினரின் உள் நுழைவுகளையும், அவர்களின் முதலீடுகளையும் தடுத்துத்தமிழர்களைக் காப்பதுபற்றித்தெரிவிக்கவுமே ஆகும். இந்நிலையில் இன்று தமிழரின் அரும்பெரும் மொழி, இலக்கியம், பண்பாடு அனைத்தும் வெளிநாட்டினரின் ஊடுறுவல்களால் சிதைந்து சின்னபின்னமாக ஆக்கப்பட்டு விட்டன. இந்நிலையில் அவற்றைக் கட்டிக்காப்பதே எங்களுக்குள்ள கடமையாக நாங்கள் கருதுகிறோம்.

எங்களின் செய்தி இதழ்களில் எங்களின் தமிழ்மொழி, பண்பாடு, இலக்கியங்கள் ஆகியவற்றைக் கட்டிக் காக்கவே கட்டுரைகளையும், கருத்துகளையும் வெளியிடுகிறோம். அந்நிலையில் தமிழரல்லாத பிறர் உணர்வுகளைப் புண்படுத்த வேண்டுமென்பது எங்களின் நோக்கமன்று.

அவ்வகையில் எங்களின் இதழ்களிலிருந்து இங்கும் - அங்குமாய் வெளிப்படையாகத் தாங்கள் எடுத்துக் காட்டியிருந்த செய்திகள் எவ்வகையிலும் தமிழரல்லாத பிறரின் உணர்வுகளையோ, அரசையோ ஊறுபடுத்துவதற்கு வழியே இல்லை.

எம் மக்களின் நலன்களையும், எம் மொழி நலத்தையும் காக்கவேண்டும் என்னும் நல்லுணர்வோடு செயல்படும் எங்களின் தொண்டு எவ்வகையிலும் சட்டத்திற்குப் புறம்பானதோ, எதிர்ப்பானதோ அன்று.

இந்நிலையில் கொடிய குற்றம் நடந்துவிட்டதாக எண்ணிகொண்டு, எம்மீதும், எங்கள் இதழ்களின் மீதும் நடவடிக்கை எடுப்பது என்பது குடியரசு அமைப்பின் வளமான அடித்தள நலனுக்கு உகந்தது அன்று. நன்றி.

சென்னை —5.
12—2—1986.

தங்கள் நம்பிக்கையுள்ள,



இந்த விடை மடலுக்கு இதுவரை எவ்வகை விடையும் வரப்பெறவில்லை.

—நம் சிறப்புச் செய்தியாளர்.

நெஞ்சு பொறுக்குதில்லையே...!

— பொதுத் தொண்டன்

என்றைக்கு மக்கள் ஏமாறுவார்களோ அன்றைய நாளை எதிர்பார்த்துப் பிணம் தின்னும் கழுகுகளாய் வீற்றிருக்கும் அமெரிக்க, உருசிய, பிற வல்லரசிய நாடுகளின் ஆளுமையை இன்றைக்கு எதிர்ப்பது என்பதோ, அக் கழுகுகளின் கொள்ளிப் பார்வைக்குத் தப்பி வாழ்வது என்பதோ அரிதாகி விட்டது. அரசியல் உடன்பாடு என்று கைகுலுக்கிக் கொண்டு, தம் மூலதனங்களை ஒவ்வொரு நாட்டிலும் போட்டு அதன்வழிச் சுரண்டிக் கொடுத்து நிற்கின்ற அந்த வல்லதிகார வெறியர்களை எதிர்ப்பவர் தாம் யார்? அவர்களிடம் கையூட்டு வாங்கிக் கொண்டு அவர்களை உள்ளே விட்டுவிட்டுத் 'தரகு' நிலையில் ஏப்பம் விடும் வல்லாளுமை இந்தியக் கொடுநெறி அரசின் அரக்கத்தனம் தான் என்னே! ஐயகோ ஏழைத் தமிழ் மக்களே, ஒரு நிமையம் எண்ணிப் பார்ப்பீர்!

எளிமையான ஒரு மழி தகடு (Blade) முதற் கொண்டு வலிய ஏவுகணை (Rocket) வரை, எந்த பொருளை எடுத்தாலும், இந்திய அமெரிக்கக் கூட்டு, இந்திய உருசியக் கூட்டு, இந்திய பிரெஞ்சுக்கூட்டு, இந்திய சப்பானியக் கூட்டு என்று தம் தாயை மாற்றான்களிடமெல்லாம் விட்டுக்கொடுத்துக்கொண்டு அவர்கள் கொள்ளையடித்துப் போகும் கோடிக்கணக்கான உருவாக்களில் கசியும் இலக்கங்களை உண்டு வாழும், இந்திய முதலாளியர் சிலரும், அவர்களுக்குப் பக்கத் துணையாகப் 'போற்றி' (துதி) பாடும், இந்திய ஆளும் கொடுநெறி அரசுகளும், இவ் வேழை மக்களை ஆட்டிப் படைக்கும் கொடுமைகளைக் கண்டு, ஒரு நிமையம் நிற்கத்தான் முடிகிறது!

பல ஆயிரக்கணக்கான பிற வல்லரசியக் (ஏகாதிபத்தியக்) கூட்டு நிறுவனங்களுள் ஒன்றே, போப்பாலில் உள்ள 'யூனியன் கார்பைடு' தொழிலகம். அமெரிக்காவுடன் கூட்டு சேர்ந்துகொண்டு, தொந்தியைப் பெருக்க முந்தி விரித்தாடும் இம் முதலாளியக் காட்டேறிகளால் நடத்தப்படுவது. தங்கள் திருவிளையாடல்களால் ஏய்த்துப் பணம் சுரண்டிக் கொழுக்கும் நிலையினின்று பல ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களையும் குடித்து ஏப்பம் விட்ட 1984 ஏப்பிரல் மாத நிகழ்ச்சியை முயன்றும் மறக்கவே முடியவில்லை!

மக்களை ஏழைகளாக, அடிமைகளாக, கூலிகளாக, கொத்தடிமைகளாக வைத்துக்கொண்டு அவர்களின் உடல்மேல் ஏறிக் குதியாளம் போடும் இந்தக் குண்டர்களுக்கு ஆதரவாக இந்தக் 'குல்லாய்' வழிமுறை அரசு குண்டர்கள் சட்டம்போட்டுப் படியாத மாடுகளை அடியோ தண்டமாய் அடிப்பதுபோல் மாந்தன் என்ற மனவுணர்வுகூட இல்லாமல், மக்களை வாட்டிப் பிழியும் இக் கருங்காலிக் கூட்டத்தாரை என்னதான் செய்வது?

கருமியத்தில் கண்ணாய், ஆட்சி இருக்கையை ஏமாற்றிப் பறித்து வைத்திருக்கும் இந்த ஆரியக் கூத்தாடிகள், இதுபோலும் தங்களின் வல்லாளுமையை மூடி மறைப்பதற்கும், முதலாளிய 'சூழ்ச்சி'கள் விளங்கக் கூடாது என்பதற்காகவும் நடத்தும் கழிசடைத் திரைப் படங்கள், உடைந்து வலுவற்று இருக்கின்ற மக்கள் உள்ளங்களை ஒட்ட வைத்து வேடிக்கை பார்க்க நடத்தும் தேசிய (ஒற்றுமைக்கான) நிகழ்ச்சிகளாய் ஒரு மொழிக் கூத்தாட்டங்கள், இவற்றுக்கும் அடங்காத மக்களைக் கடவுள், கோயில் என 'பூச்சாண்டி' காட்டிக்கொண்டு சங்கராச்சாரி எனும் நக்சல்காரர்களை நாய்களாக உலவ விட்டு வேடிக்கைக் காட்டுகின்ற சோற்றுப் பிண்டங்கள் உலவுகின்ற நாடாகவன்றோ போய்விட்டது இது!

ஐயகோ, மாந்தனே! நீ உய்வாயோ? என ஓக்காலம் இடும் இளைஞர்களின் முதுகுகளில் ஓங்கிக் குத்திக் கொலை செய்து களிப்புறும் இந்த வாணிகப் பார்ப்பன இழிஞர்கள் செய்கின்ற கூத்துகளை என்னதான் செய்வது?

போப்பாலில் கெட்ட 'ஆவி' புகுந்துவிட்டதாய் ஏறத்தாழ ஒரு கோடி உருவாயையும் தாண்டி 'வேள்வி' (யாகம்) என 800 பதினம் (Litre) நெய், பல்லாயிரம் சிரெடை (Kilogram) அரிசி, பிற பொருள்கள் போட்டு சங்கராச்சாரியார் முன்பு எரித்து வேடிக்கை காட்ட நடுவண் பைதிர (மத்தியப் பிரதேச) அரசே உதவுகிற சூழல் வளர்ந்து விட்டிருக்கிற இக்கொடிய நிகழ்ச்சியையும் கேட்டுக்கொண்டு...

— சூடு சுரணை இல்லாமல் நாமெல்லாம் தமிழன் என்று கூறித் தலைகுனிந்து கொண்டு, 'இந்தியன்,' என்று எக்காளமிடும் மூண்டத்தனத்தையும் கேட்டு எங்குபோய் முட்டிக்கொள்வது?

வாழ்ந்து கொண்டிருந்த, பரந்த எல்லைகொண்ட நாட்டைப் படிப்படியாக விட்டுக் கொடுத்துவிட்டு, இன்றைக்கு எஞ்சியிருக்கிற கொஞ்ச நிலத்திலும் அடிமையாய் இனத்தை மறந்து, மொழியை மறந்து, ஏழை-பணக்காரன், முதலாளி-தொழிலாளி, நிலக்கிழான்-உழவன் என்று வகுப்புப் பிரிவுகளை வளர்த்துக்கொண்டு சக்கிலி, பறையன், முதலியார், பிள்ளை எனச் சாதிச் சேற்றுக்குள் சிக்குண்டு, வடநாட்டு முதலாளிகளும், வெளி நாட்டுச் சுரண்டல் கும்பல்களும், சுரண்டுவதற்கு அகலமாகக் கதவுகளைத் திறந்து வைத்துக்கொண்டு, அவன் ஆளுமையின் கீழ் அடிமைகளாய் வாழும் நம்மை எண்ணித்தான் இந்தக் கதறல்...!

இன்றைக்கு அடிமைகளாய் வாழும் தேசிய இனங்கள் அனைத்திற்கும் இந்தியக் கொடுநெறியின் கீழ் இதே நிலைதானே...!

ஏ... தமிழகமே...!
ஏ... எந் தமிழ் இன மக்களே...!
ஏ... அடிமைகளே...!
பாட்டாளியே......உழவனே...!

- எங்கிருக்கின்றாய்? உன்னை நோக்கித்தான் இந்த கூப்பாடுகளைப் போடுகிறோம்.

— சாப்பாட்டிற்காகக் கூப்பாடு போடும் அரசியல்காரர்களைக் கண்டே பழக்கமுற்ற உங்களுக்கு எங்கள் குரல்கள் காதில் விழவில்லை என்பது தெரிகிறது..

உங்களுக்காக நீங்களே எழ மறுக்கும் உங்கள் நிலையை யாரிடம் போய் சொல்லுவது?

எழு, விழி, தமிழா! உன் நிலை அறி...!

— என்றைக்குத்தான் அவ்விடிவு நாள் வருமோ? உன் பரந்த தோள்கள் இன்று சூம்பிவிட்டனவா?... கவலையில்லை...!

அதன்மீது துமுக்கிகளை ஏற்றி நிறுத்து—!

* உன்னை அடிமைப்படுத்தி வைத்திருக்கிற வடநாட்டு வல்லாளுமை நாய்களிடமிருந்து உன் நாட்டை விடுவிக்கப் போரிடு!
* உலகச்சுரண்டல் பிரிவு வல்லரசிய நாடுகளின் ஊடுறுவல்களை வெட்டி வீழ்த்து!
* உன் தமிழ் மக்களைத் தலைநிமிர்த்திச் சாதி, மதமற்ற நிலையில் சமநெறி, நிறையினராய் ஏற்றம் பெற வைக்கப் போராடு!

ஐயகோ! தமிழா உன்னைத்தான்...!
எங்கிருக்கிறாய்?

தமிழா...? தமிழா...?? தமிழா...???

ஆசிரிய இனத்தின் சார்பாக ஒரு நன்றிக் குரல்!

பேரன்பு கனிந்த பாவலரேறு ஐயா அவர்கட்குப் பணிவான வணக்கங்கள். நலம், நலமே சூழ எல்லாம் வல்லானை இறைஞ்சுகின்றோம்.

நிற்க! எம் ஆசிரியர் போராட்டக் காலத்தில் அவர் தம் மெய்யான-நேரிய கோரிக்கையறிந்தும், உணர்ந்தும், வருந்தியும், 'ஆசிரியரைச் சிறையில் இடுவது, அறிவைச் சிறையிலிடுவதாகும்' என்னும் உணர்வும்-எழுச்சியும் கலந்த உண்மையான நிலை பகரும் அரிய ஆசிரிய உரை ஒன்று எடுப்பான எழுத்துகளால் வெளியிட்டும் தங்கள் ஆதரவைக் காட்டி நின்றீர்கள். அரசுக்கும் சரியான எச்சரிக்கையும் செய்தீர்கள். தங்கள் மெய்யான அன்பு ஆதரவு வரிகள் பயன் அளிக்கும் வண்ணம் அரசும் ஓரளது உணர்ந்து கீழிறங்கி வந்து பல்வேறு கோரிக்கைகளில் உள்ளடங்கியவற்றுள் சிலவற்றை நிறைவேற்றித் தர இசைந்த நிலையில் கல்விக்கூடங்கள் இன்று கடனுற்றத் தொடங்கிவிட்டன.

கோரிக்கை எழும்பிய 126 நாள்களில் உண்ணா நோன்பு-துயரநாள்-கறுப்புக்கொடி காட்டல்-அடையாள வேலை நிறுத்தம்-ஆணை எரிப்பு எனப் படிப்படியாக-மெல்ல மெல்ல வளர்ந்து அமைதியாக 39 நாள்கள் மூகாமைப் போராட்டமாய் உருவெடுத்தும் ஏறத்தாழ 25 நாள்களுக்கு மேல் ஆசிரியர்களைச் சிறையில் அடைத்தும் 17 ஆசான்மார் உயிரைக் குடித்தும் அரசியல் அமைப்புகள் எதிர்க் கட்சிகள்-தொழிற் கழகங்கள் பல்வேறு தாளிகைகளின் எச்சரிக்கை ஊர்வலங்கள், ஆர்ப்பாட்ட முழக்கங்கள் -பேரணிகள்-கடையடைப்புகள் இவ்வளவு நிகழ்வுக்கும் பின்னர்தான் போராட்டத்திற்குப் பயன் அளிக்க அரசு முன் வந்தது என்பதைப் பார்க்கையில் இது நாடா, அன்றிக் காடா? ஆள்பவர் மாந்தரா அன்றி அரக்கரா? என எண்ணிக் குமுற வேண்டியுள்ளது.

அரசின் அடக்குமுறை, பொய் வழக்கு - போலி விளம்பரம் வறட்டு இறுமாப்பு இவற்றைக்குறைக்க, தங்கள் தனித்தமிழும் பக்கத் துணையாக நின்று எம்மனோர்க்கு மிக்க சிறப்பு ஊட்டியது. எம் ஆசிரியர் இனத்தின் சார்பில் நன்றியைப் பல்லாற்றானும் தங்கட்குப் படைத்து மகிழ்கின்றோம்.

— புலவர். நாவை-சிவம், மணப்பாறை.

இந்திராவும் - இராசீவும் நல்ல நடிகர்கள்!

திசம்பர் 16 ஆம் நாள் கருநாடகத்தில் நடந்த முதல் உலகக் கன்னட மாநாட்டில், இராசீவ் கலந்து கொண்ட செய்தியை அறிந்திருப்பீர்கள்.

கருநாடகப் பண்பாட்டைப் பின்பற்றி அவர் தலைப்பாகை அணிந்து மாநாட்டுக்குள் நுழைந்த போது, கூடியிருந்தோர் கை தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்களாம். இந்தச் செய்திக்குப் பக்கத்தில் இன்னொரு சின்ன செய்தியும் வந்தது. மாநிலத்தின் சிக்கல்களைத் தலைமை அமைச்சரிடம் விளக்குவதற்காக மாநாட்டுக்கு வர முயன்ற 30 பேர் காவலரால் தளை செய்யப்பட்டனர் என்ற செய்தி அது.

இதனைப் படித்தவுடன் இராசீவின் அன்னை நினைவு வந்தது. 1980 இல் நடந்த 'உலகத் தமிழ் மாநாட்டில்' கலந்து கொள்ள அவர் இந்தத் தமிழ் நாட்டுக்கு வந்திருந்தார். 'வணக்கம்' என்ற தமிழ்ச் சொல்லுடன் அவர் பேச்சைத் தொடங்கியபோது, மிகுதியான கையொலி. அப்பொழுதுதான் மோதல் என்ற பெயரில் இளைஞர்களைச் சுட்டுத் தள்ளும் நிகழ்ச்சி தமிழகத்தில் உச்ச கட்டத்தில் இருந்தது. சிக்கல்களுக்கு எதிரான உணர்வு மக்களிடம் உருவாகி வளரும்போது கொஞ்சம் நாடகம் நடித்து விட்டால் அவர்களை ஏமாற்றி விடலாம் என்பது இந்திராவுக்கு மிக நன்றாகத் தெரிந்தது.

எடுத்துக்காட்டாக, 4 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட எண்ணெய் நெருக்கடி பற்றிக் குறிப்பிடும் போது, அந்தக் கடுமையான எண்ணெய் நெருக்கடி பரந்துபட்ட மக்களைத் தாக்கியதால் நாடெங்கும் கசப்புணர்வு தோன்றியது; அப்பொழுது இந்திராவுக்கு ஏற்பட்ட எண்ணம் வேறு எந்தப் பெருந்தலைவருக்கும் ஏற்பட்டிருக்க முடியாது. அடுத்த நாளிலிருந்து அவர் தம் உறைவிடத்திலிருந்து பகரமாக குதிரை வண்டியில் பாராளுமன்றத்துக்கு வந்து இறங்கினார்; இந்த நாடகத்தை வெளிப்படுத்த நினைத்த வாசுபாய் பாராளுமன்றத்துக்கு மாட்டு வண்டியில் வந்திறங்க ஆரம்பித்த பின்னர்தான் இந்திரா குதிரை வண்டி நாடகத்தைக் கைவிட்டார்.

அன்னையிடமிருந்து இந்த நாடகம் போடும் பழக்கத்தை இராசீவ் நன்றாகவே கற்றுவைத்திருக்கிறார். கருநாடகத்துக்குச் சென்றால் தலைப்பாகை வைத்துச் செல்வது; மலைப் பகுதிக்குச் சென்றால் கோழி இறகுத் தொப்பி வைத்துக் கொள்வது; என்று மிக நன்றாக நடிக்கிறார். அவரின் இந்தத் திறமையைப் பார்த்து விட்டுத்தான் நமது தொலைக்காட்சியில் இராசீவை முழு நேரத் தொலைக்காட்சி நடிகராக மாற்றி விட்டார்கள்.

இராசீவ் இப்படி வகை வகையாக நாடகம் நடிப்பதற்கு அவரின் துணைவியார் மிகவும் துன்பப்பட வேண்டியிருக்கும் என்று எண்ண வேண்டியுள்ளது. வேறு வேறு பண்பாட்டிற்கு ஏற்ற உடைகளைத் தேடுவது அவருக்குக் கடினமல்லவா? அதனால் இந் நாட்டின் குடிமகன் என்ற முறையில் அவர்க்கு நாம் உதவலாம். பல ஒப்பனைப் பொருள்களும் அடங்கிய ஒரு பெட்டியை இராசீவிற்குப் பரிசாக அளிக்கலாம் கைக்கு அடக்கமான இந்தப் பெட்டியை இராசீவ் வெளி நாடு போகும்போது கூட எடுத்துச் செல்லலாம்.

இதில் இருக்கிற ஒப்பனைப் பொருள்களைத் தேவைக்கேற்பப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, குழந்தைகளுக்காகப் புதிய கல்வித் திட்டத்தை அறிவிக்கும் மாநாட்டில் கலந்துக் கொள்ளப்போகிறார் என்று வைத்துக் கொள்வோம். பள்ளிச் சிறுவர் அணிவது போன்ற அரைக்கால் சட்டையும், வெள்ளைச் சட்டையும் அணிந்தவாறு கூடச் செல்லலாம். ஆசிரியரே இல்லாமல் நடக்கிற பள்ளிக் கூட மாணவர்கள் கூட அவரின் அன்பைப் பார்த்துச் சொக்கிப் போவார்கள். அதே போல முதியோர் கல்வி மாநாட்டைத் திறந்துவைக்க அவருக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். ஒரு நீண்ட கைத்தடியை விரைப்பாக ஊன்றியவாறு அவர் சென்றுவரலாம்; இப்படி நேரத்திற்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ள பிறவகையான கருவிகளும் கருத்துப் பொருட்களும் இந்தப் பெட்டியில் இருக்கின்றன. இந்த அன்புப் பரிசை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறோம்.

கடைசியாக நாம் இன்னோர் ஆசையையும் சொல்லி விடுவோம். பொது மக்களுக்கு ஒத்துவராத இது போன்ற உயர் குணங்களை இந்திரா அறிந்திருந்தார். அதனைத் தம் இளைய மகன் சஞ்சய்க்கும் இராசீவிற்கும் நன்றாகவே கற்றுக் கொடுத்தார். இப்பொழுது இந்தக் கலையில் இராசீவ் தேர்ச்சி பெற்றுவிட்டார். இனி அவர் அன்புக்குரியவர்களுக்கும் இது போன்ற பயிற்சியைத் தரலாம் அன்றோ? பிற்காலத்தில் அது இராசீவிற்கு நிறைய பயன்படும் என்பதற்காகத்தான் சொல்லி வைக்கின்றோம்.

- நன்றி: 'தேன்மழை', திசம்-சன '86.

போராடி வெற்றி பெற்ற பிலிப்பைன்சு மக்களே, மக்கள்!

தொடர் : 7.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தமிழீழம் விடுதலை பெறுமா? வழியென்ன?

- மலர்மாறன் -

தமிழக அரசு மறைமுகமாகத் தொண்டர் படையை அனுப்பித் தமிழ் ஈழநாடு அமைக்க ஏற்பாடு செய்வதைக் கண்டும் காணாதது போன்று இருந்து விடுவார்கள். ஏனெனில், அவர்களுக்கு அதனால் ஒரு சிக்கலான சூழ்நிலை, அவர்களின் தலையீடு இன்றியே தீர்ந்து விடுகிறது இல்லையா ?

இந்த நிலையை நாம் நன்ருகப் புரிந்துகொண்டு, செயலில் இறங்கவேண்டும்.

∴ ∴ ∴

தமிழர்களைக் காப்பாற்றி முன்னேற்றுவதற்குத் தான் தமிழக அரசு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தை ஆட்சி செய்ய யாரைத் தமிழ் மக்கள் தேர்ந்தெடுக்கின்ருர்களோ, அவர்களிடம் தமிழக அரசைக் கொடுத்துத் தமிழ் இனத்தைக் காக்கும் பொறுப்பை ஒப்படைத்து இருக்கின்ருர்கள்.

ஈழத் தமிழர்கள் நமது உடன் பிறப்புகள். 35 ஆண்டுகளுக்கு முன்னுல் தவருக எல்லைக்கோடு போடப்பட்டதால், அவர்கள் நமது உடன்பிறந்தவர்களாக இல்லாது போய்விட மாட்டார்கள். அவர்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை நம் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியாது அப்படி இருக்கவேண்டிய தேவையும் இல்லை.

தன் இனம் அழிக்கப்படுவதை உலகத்தில் இருக்கும் எந்த இனமும் பார்த்துக்கொண்டு வாளா இருப்பதில்லை.

இலங்கையிலே தமிழ் இன மக்கள் படுகொலை செய்யப்படுகிருர்கள் என்பதைக் கேள்விப்பட்டவுடன், தமிழக அரசு ஈழத்தமிழ்த் தொண்டர் படையை ஏற்படுத்தி, இலங்கைத் தீவிற்கும் அனுப்பியிருக்க வேண்டும். ஈழத் தமிழர்கள் சிங்களக் காட்டு விலங்காண்டிகளிட மிருந்து விடுதலை பெற உதவியிருக்க வேண்டும்.

தொண்டர் படையை அமைத்து, அவர்களுக்கு வேண்டிய கருவிகளைக் கொடுத்து அவர்களை இலங்கைத் தீவிற்குள் கொண்டு சேர்க்கத் தமிழகத்தை ஆட்சி செய்பவர்களால் தாம் முடியும். மற்ற அரசியல் கட்சிகளால் முடியாது. ஏனெனில், ஆட்சியில் இருப்பவர்களிடந்தாம் ஆற்றல் வாய்ந்த அரசு இயந்திரம் இருக்கின்றது.

தமிழக ஆட்சியாளர்கள் தலைமை தாங்கிஅப்படிச் செயலில் ஈடுபட்டிருந்தால், ஆர்த்தெழுந்து தமிழ் மக்கள் அனைவரும் கட்சி வேறுபடுகளை மறந்து, தமிழர் அரசின் பின்னுல் நின்று இருப்பார்கள், ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள், அழிவிலிருந்து காப்பாற்றப் பட்டிருப்பார்கள். ஈழத் தமிழனின் அடிமை விலங்கு ஒடிக்கப்பட்டு, அவனுக்கு உரிமை கிடைத்திருக்கும்.

அந்தச் சரியான செயலைச் செய்யாமல், தமிழக அரசு ஆர்த்தெழுந்த தமிழ் மக்களை ஏமாற்றித் திசை திருப்பும் செயல்களில் இறங்கியது.

ஆட்சியில் இல்லாத அரசியல் கட்சிகளும், குமுகத்தொண்டு நிறுவனங்களும் செய்யக்கூடிய கடை அடைப்புகளையும், கண்டனக் கூட்டங்களையும் கருப்புச்சட்டை அணிவதையும், பொருள் தண்டுவதையும் செய்து கொண்டிருந்தது. ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற நடுவண் அரசுதான் உ. ஒ. (ஐ.நா.) அவை மூலமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, தமிழ் அரசு ஒன்றும் செய்யமுடியாது என்று கூறிக் கொண்டிருந்தது.

அதன் விளைவு ?

ஈழத் தமிழினம் காப்பாற்றப்படவே இல்லை. அவர்கள் இன்னமும் சாகடிக்கப் பட்டுக்கொண்டே இருக்கின்ருர்கள். சட்டம் என்ற பெயரைச்சொல்லி ஈழத் தமிழர்களின் கைகளில் அடிமைத் தளைகளைப் பூட்டிக் கொண்டிருக்கின்றது சிங்கள அரசு.

இங்கே ஆட்சியில் இல்லாத அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தங்களுக்குத் தெரிந்த, தங்களால் முடிந்த போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றன. தலைமை இங்கே சரியாக இயங்கவில்லை. ஆகவே, ஈழத் தமிழன் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்படவில்லை.

தமிழக அரசின் தலைமைப் பொறுப்பு, தமிழர் ஒருவர் அல்லாத மா. கோ. இராமச்சந்திரன் கையில் இருக்கின்றது. தமிழர் படுகொலை செய்யப்படுவதைக் கண்டு அவரின் உள்ளுணர்வு துடித்தெழவில்லை.

உடன் பிறந்தவர்களுக்குள்ளே பாச உணர்வுகள் இயற்கையாகவே அமைகின்றன. அப்படி இயற்கையாகவே அமைந்துள்ள உணர்வுகள் உறங்கிக் கொண்டிருந்தால் அவற்றை விழித்தெழச் செய்ய முடியும். உடன் பிறப்பாக இல்லாத ஒருவரிடம் அந்த உணர்வைத் தட்டி எழுப்பி வரவழைக்க முடியாது.

மா. கோ. இராமச்சந்திரன் தமிழரல்லர்-அவருக்குத் தமிழின உணர்வு கிடையாது. தமிழக ஆட்சியில் நீடிப்பதற்காகத் தமிழின உணர்வு உள்ளவர் போல நடிக்கிருர்.

அவரிடம் இல்லாத தமிழின உணர்வை எப்படி உண்டாக்க முடியும் ?

சருக்கரையாக இருந்தால் தான் இனிக்கும். சர்க்கரை என்று தாளில் எழுதி நக்கினுல் அது இனிக்குமா ?

தமிழர்களை ஏமாற்ற 'உடன் பிறப்பே' என்று வாயால் மா. கோ. இராமச்சந்திரன் சொல்லுவார். அதை உண்மை என்று நம்பித் தமிழர்கள் கை தட்டுவார்கள்.

தமிழர்கள்படுகொலை செய்யப்படுவதைக் கேள்விப் பட்டவுடன், உண்மையிலேயே தமிழனின் உடன் பிறப்புகளாக இருக்கும் அத்தனைப் பேர்களின் உள்ளங்களும் பதை பதைக்கின்றன. உணர்வுகள் துடிக்கின்றன. எப்படியாவது ஈழத் தமிழர்களைக் காப்பாற்றிவிட வேண்டுமென்று வழிகளைத் தேடுகிருர்கள்.

ஈழத் தமிழர்களைக் காப்பாற்றும் வல்லமை படைத்த தமிழக அரசைக் கையில் வைத்திருக்கும் மா. கோ. இராமச்சந்திரன் என்ன செய்கிருர் ?

தமிழர்களைக் காப்பாற்றுவது தனது கடமை அன்று. அது நடுவண் அரசின் பொறுப்பு என்று கூறிக் கொண்டிருக்கிருர். கொதித்தெழுந்துள்ள தமிழர்களை ஏமாற்றித் திசை திருப்பும் செயல்களில் இறங்கித் தமிழக அரசின் விலைமதிப்பற்ற நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிருர். ஈழத் தமிழர்களுக்கு உதவி செய்ய விரும்பும் தமிழர்களை அடக்க உடனடிச் சட்டம் போட்டுக் கொண்டிருக்கிரு. இவைதாம் மா. கோ. இராமச்சந்திரன் தமிழ் உடன்பிறப்புகளைக் காப்பாற்றச் செய்யும் முயற்சிகளாகும்.

அட்டைக்கத்தி வீரர், மா. கோ. இராமச்சந்திரன், உதவி வேண்டாத வீரர் (அசகாய சூரர்) என்று நினைத்துத் தமிழர்களைக் காப்பாற்றும்படி நாம் அவரைக் கேட்கவில்லை. செயலில் இறங்கினுல், இலங்கைத் தீவையே ஏழு நாள்களில் பிடித்துவிடக் கூடிய அளவு, திறமை வாய்ந்த தமிழக அரசு இயந்திரத்தைத் தமிழக மக்கள் அவரிடம் ஒப்படைத்துள்ளதனுல்தான் கேட்கிறேம்.

இப்போது ஓர் உடனடிச்சட்டம் போட்டுள்ளனர்; தமிழர் நாட்டில் 5 பேர்களுக்கு மேல் கூட்டாகச் சேர்ந்து கருவிப் பயிற்சி செய்யக்கூடாது என்பது தான் அது.

கருவிப் பயிற்சி செய்து கொண்டு, தமிழர்கள் இலங்கைக்குச் சென்று, ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற முயற்சி செய்வதைத் தடுக்கும் நடவடிக்கையாக அல்லாது, வேறு என்ன என்று கூறுவது இதை ?

தமிழகத்தில் செயவர்த்தனுவுக்கு எதிராக ஊர்வலங்கள் நடத்த தடை செய்துள்ளார். செயவர்த்தனுவின் கொடும்பாவியை (பாவியை)க் கொளுத்துவோரைத் தளை செய்து, காவலில் வைக்க ஏற்பாடு செய்துள்ளார்.

தமிழக முதல் அமைச்சர் மா. கோ. இராமச்சந்திரனின் செயல்களைப் பார்த்தால், செத்துக்கொண்டிருக்கும் தமிழ் இனத்திற்கு ஆதரவாக அவர் செயல்படுவதாகத் தெரியவில்லை. தமிழ் இனத்தை அழிப்பவர்களை ஆதரித்துச் செயல்படுவது போல் நடந்து கொண்டிருக்கிருர்.

தமிழக மக்களின் காப்பாளர் பதவியில் இருந்து கொண்டு, தமிழர்களைக் கொன்று குவிப்பவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிருர்.

'வேலியே பயிரை மேய்கிறது' என்ற பழமொழிக்குப் பொருத்தமாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்ருர்.

∴ ∴ ∴

மா. கோ. இராமச்சந்திரன் தமிழரல்லர். தாம் தமிழரல்லர், மலையாளி என்று அவரே கூறியுள்ளார். ஆகவே, தமிழர்களுக்கு எதிராக அவர் செயல்படுவதில் வியப்பு ஒன்றுமில்லை. ஆனுல், அவரின் தமிழர் பகைச் செயல்களைக் கண்டும், அவரை முதல்வர் பதவியில் வைத்திருக்கும் தமிழர்கள் என்று கூறிக் கொள்ளும் 120 சட்டமன்ற உறுப்பினர்களின் செயல்களைக் கண்டு நான் அதிர்ச்சி அடையாமல் இருக்க முடியவில்லை.

அந்த 120 அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களும் நினைத்தால், மா. கோ. இராமச்சந்திரனை நீக்கி விட்டுத் தங்களில் தமிழர் ஒருவரை முதலமைச்சராக அமர்த்திக் கொள்ளலாம். ஏன் அதைச் செய்யாமல், மா. கோ. இராமச்சந்திரன் செய்யும் தமிழர் பகைச் செயல்களுக்குத் துணை போய்க் கொண்டிருக்கிருர்கள் ?

எங்களுக்குள் ஒருவருக்கும் திறமையில்லை என்று நினைக்கிருர்களா? அல்லது மா. கோ. இராமச்சந்திரன் தங்கள் பதவிகளைப் பறித்து விடுவாரென்று அஞ்சுகின்ருர்களா ?

யார் யாருடைய பதவியைப் பறிப்பது ?

அ. இ. அ. தி. மு. க. தமிழர்களே கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

ஆளும் கட்சியிலுள்ள அ. இ. அ. தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களே தமிழினத்தைக் காக்கும் பொறுப்பு உங்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது நீங்கள் மா. கோ. இராமச்சந்திரனிடம் தலைமைப் பொறுப்பை ஒப்படைத்துள்ளீர்கள். அவர், அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் இனத்தைக் காக்க முற்படவில்லை. மாருகத் தமிழ் இனத்தை அழித்துக் கொண்டு இருப்பவர்களுக்குத் துணைபோகும் செயல்களைச் செய்து கொண்டிருக்கிருர்.

இதைப் பார்த்துக் கொண்டு வாளா இருந்தீர்கள் என்ருல், தமிழினத்தை அழிக்கத் துணைபோன வஞ்சகக் குப்பலில், நீங்கள் தலையானவர்களாக ஆகிவிடுவீர்கள்.

தமிழர்கள் சரியான செயலில் இறங்க அணியமாகி விட்டார்களா ? இல்லையா? என்பதைக் காட்டும் கருவியாக அமைந்துள்ளது தமிழக முதல் அமைச்சர் பதவி. அது தமிழன் கையில் வந்தவுடன், தமிழகம் செயலில் இறங்க அணியமாகி விட்டதென்பதை நடுவண் அரசு புரிந்துக்கொள்ளும்.

நடுவண் அரசு தமிழகத்தில் ஆட்சி செய்வோர்களின் குரலுக்குத்தான் மதிப்புக் கொடுக்குமே தவிர, மற்றவர்களின் குரலுக்குச் செவி சாய்க்காது. தமிழக, ஆட்சியில் உள்ளவர்களே, தமிழர்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகளில் வேகம் காட்டாத வரையில், நடுவண் அரசு ஏனோ தானோ என்றுதான் செயல்படும்.

தமிழர்களை ஆட்சி செய்வதற்குத் தமிழரல்லாத ஒருவரை தமிழக முதல்வராக வைத்துக்கொண்டிருக்கும் வரை, தங்களைக் காப்பாற்றிக் கொள்வதில் தமிழர்கள் அக்கறை காட்டவில்லை என்றுதான் நடுவண் அரசு கருதும்.

ஆகவே, இப்போது நமது உடனடித் தேவை தமிழர் ஒருவரின் கீழ் அமைந்துள்ள தமிழக ஆட்சி தான். அது ஈழத் தமிழரைக் காக்க எடுக்கும் முதல் நடவடிக்கை மட்டுமன்று-ஈழத் தமிழரைக் காக்கும் வழியும் அதுதான் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்,

[முற்றும்]

பொதுவுடைமைக் கட்சியின் 'பூர்சுவா'தனம் !

வலது பொதுவுடைமைக் கட்சியின் 12 ஆவது மாநாட்டில் தேர்ந்தெடுக்கப் பெற்ற நடுவண் குழுவிலிருந்து (Central Committe) குசராத்தைச் சார்ந்த சந்துபாய் பட்டேலும், தமிழகத்தைச் சார்ந்த இராமதாசரும் கழித்துக் கட்டப்பட்டனர். ஏனெனில், அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாதாம் !

உலகில் எந்த ஒரு பொதுவுடைமைக்கட்சியும். ஏன் முதலாளித்துவக் கட்சிகளே கூட இதுவரையில் பின்பற்ருத வழிமுறையை 'மாக்சியர்கள்' வெட்கங்கெட்ட முறையில் நடைமுறைப்படுத்தி யிருக்கின்றனர். ஆங்கிலம் தெரிந்த 'பண்டிதர்கள்'தாம் இனி, மார்க்சியக் கட்சித் தலைமையில் இடம்பெற முடியும். கல்வி அறிவற்ற ஆனுல், வகுப்பு (வர்க்க) உணர்வுள்ள பட்டாளி வகுப்புப் போராளிகளுக்கு இனி, அங்கே இடமில்லை. ஆக, ஆங்கில நடுத்தர, மேட்டுக் குடி வகுப்பினர் மட்டுமே 'மார்க்கிய' பொதுவுடைமைக் கட்சித் தலைமைக்கு வரமுடியும்.

—'புதிய சனநாயகம்'-சனவரி, 1986.

விடுதலைக்கு மாற்று விடுதலையே! உரிமை இழப்பு அன்று!

சிறப்பு மடல்

வெற்றிப் பயணம் தொடரட்டும் !

தமிழ்நிலம், தொகுதி-3, இதழ் எண். 69 இல் வெளிவந்துள்ள முன்பக்கச் செய்தி, உண்மைத் தமிழ் நெஞ்சங்கட்கு அதிர்ச்சியையும், துயரையும் அளித்துள்ளது.

நாடு விடுதலை பெற்று 39 ஆண்டுகள் ஆகியும் இன்னும் நம் உரிமையற்ற மண்ணிலும், மீளா அடிமைத் தனத்திலும் ஒளிந்தும்-நெளிந்தும் உழன்று வருகிறோம் என்பதற்கு இத்தகு உருட்டல்-மிரட்டல்களே போதிய சான்றாகும்.

உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் வேறொன்றுமாய் ஊளறிக் கொட்டும் குள்ள நரிகளும், 'காக்காய்'க் கூட்டங்களும் வீர உலாப்போந்து விளைவை அறுவடை செய்து கொண்டிருக்கும் காலம் இதுவன்றோ !

காட்டிக் கொடுப்போரும் கூட்டிக் கொடுப்போரும், நரிக் கண்ணர்களும், குடிலர்களும் ஏற்றம் பெற்றுலவும் இம் மண்ணில்தான் 'மான உணர்வு' பொங்கச் சேர, சோழ, பாண்டியர்களின் விறலும் திறலும் பலர் அறியப் பறைசாற்றப் பெறுகிறது.

ஈழத்தை வென்றான் என்றும், இமயத்தில் கொடி பதித்தான் என்றும் கனக விசயர்களின் தலையில் கல் சுமக்கச் செய்தான் என்றும், வாய்கிழியப் பேசி வரும் வரலாற்றுப் பெருமை வையம் அறியாததன்று.

கருப்புப் பணம் வைத்திருப்பவர், கள்ளக் கடத்தல் செய்து பிழைப்பவர்; வருமான வரித் துறையை ஏய்த்து வாழ்பவர், பதுக்கல் செய்பவர், பகற்கொள்ளை அடித்து உண்டு கொழுத்து வருபவர், பல வளமனைகளுக்கும், தொழிலகங்கட்கும் உரிமையாளர் என்றெல்லாம் குற்றச் சாட்டுக் கணைகளைப் பாவலரேறு அவர்களின் மீது நடுவணரசு சுமத்திடவில்லை! சுமத்தவும் இயலாது.

அதிகாரச் செருக்குடன் தங்களை முகாமைப் படுத்தி விளம்பரம் செய்து கொள்வதையே மக்களுக்குச் செய்யும் தொண்டாக எண்ணுவோரால் இத்தகைய செயல்களில்தாம் கவனம் செலுத்தமுடியும்!

மக்களாட்சி மலர்ந்து மணம் பரப்புகிற இந்தி(ய)த் துணைக் கண்டத்தில் எழுத்துரிமை, பேச்சுரிமை என்பனவெல்லாம் வெறும் ஏட்டளவில்தான் என்று மெய்ப்பிக்கப் பெறுகின்றன போலும் !

உணர்வார்ந்த தூய சிந்தனையாளர்களால் மட்டுமே உண்மை நிலைகளை, மக்கள் மன்றில் படம் பிடித்துக் காட்டமுடியும். சுரணையற்ற சோற்றுத் துருத்திகளாகிப் போன மாக்கள் நச்சுப் புழுக்களாய எச்சிற் பொறுக்கிகளாய், அறிவிலிகளின நிழல்களாய்த் தங்களை வெளிப்படுத்திக் கொண்டு கொள்ளையடிப்பதும் கைவந்த கலையாகிப் போன நாட்டில், மக்கள் தொண்டாவது ! மண்ணாங்கட்டியாவது! நாடகமே இங்கு உலகம் !

அரசியலிலும், பொருளியலிலும், இன நிலையிலும் மொழியளவிலும் இன்னும் நாம் விடுதலைபெறவில்லை என்பதை ஓரளவே சிந்திப்போரும் ஒப்புக்கொள்வர். ஏழைகள் அரசியலைப் பொறுத்தவரை ஏதிலியர்தாமே! ஏனைய இனத்தவரை விடத் தமிழன் எத்துறையில் ஏற்றம் பெற்று விளங்குகிறான்? இன்னமும் கடைநிலைப் பணிகளின் காவலனாய்ப் பிறருக்கு வால்பிடித்தன்றோ வயிறோம்பித் திரிகின்றான் !

இந்தி(ய)த் துணைக் கண்டத்தில் இத்திதானே அரசோச்சுகிறது! அதற்கன்றோ ஆண்டுதோறும் பல கோடி உருவாக்கள் வளர்ச்சி என்ற நிலையில் பாழாக்கப்படுகின்றன.

மொழியையும், இனத்தையும் முன்னிருத்தித் தூய குறிக்கோள்களுடன் முனைந்து செயல்படும் உயரிய தமிழ்த் தொண்டுக்குத்தான் எத்தனை இடையூறுகள் ! எத்தனைத் தடைக்கற்கள் !

ஒரு 'தென்மொழி'யும், 'தமிழ்நிலமும்', 'தமிழ்ச் சிட்டும்' இங்கு மட்டுமல்ல ! உலகெங்கும் வாழும் பல்லாயிரக் கணக்கான உள்ளங்களில் ஊட்டிய உணர்வு விதைகள் காய்த்துப் பூத்துக் கனியாக விளங்குவதைக் காலம் உணர்த்தும்,

'தடைக் கற்கள் உண்டென்றாலும்
தடந் தோளுண்டெனச் சிரித்தாய்'

என்ற பாவேந்தரின் அடியொற்றித் தங்கள் தொண்டு தொடரட்டும். யானை செல்லும் பெருவழி பற்றி அறியாதார், பூனை செல்லும் குறுவழி குறித்துப் பதுப்பதுப்புலனாய்வு மேற்கொள்ளட்டும்! உலகம் ஒருநாள் விளங்கிக் கொள்ளாமலா போகும்? ''மொழியையும், நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை !'' ''மாய்ந்திடல் வரையும் உரைப்பேன் ! உழைப்பேன் மக்களுக்கே !' என்ற சீரிய பாதையில் தங்களின் செம்மாந்த பயணம் வெற்றியை ஈட்டட்டும் ! — விடியல் விரும்பி, கடலூர்.

வேலையற்றவர்கள் வான வில்லை விழ்த்தப் புறப்பட்டுள்ளனர் !

அன்பிற்கும் பெரு மதிப்பிற்குமுரிய ஐயா' வணக்கம். 'தமிழ் நிலம்' இதழ் எண்: 69-இல் கண்ட செய்தியால் பெரிதும் வருத்தமுற்றேன். தென்மொழி, தமிழ் நிலம் இதழ்களின் மேல் தில்லி அரசு நேரடி நடவடிக்கை எடுக்க முனைந்திருப்பது எத்துணைக் கொடுமை! தமிழுக்கு- தமிழர்க்கு இழைக்கப்படும் பெருங்கொடுமை !

அணுவிலும் ஒலிக்கும் அருந்தமிழை ஒழிக்கத் திட்டமிட்டுத் தீட்டிய பெருங்கேடாகும்! முழுமூடர்கள்- சுடுகாட்டிற்குப் போக வேண்டியவர்கள்- சோலைக்குள் ஏன் நுழைந்தார்களோ? வேலையற்றவர்கள் வான வில்லை விழ்த்தப் புறப்பட்டதுபோல் உள்ளதன்றோ?

காட்டி கொடுக்கும் கருங்காலிகள் தங்களின் தாய்க்கு அரணாயிருக்கும் துணைகளையா அழிக்க வேண்டும்? தூய தமிழ் வளர்க்கும் தென்னாட்டின் பொன்னேடுகளாம் 'தென்மொழி' 'தமிழ்நில'த்தையா ஒடுக்கப் புறப்படல் வேண்டும்?

கூறு கெட்ட குப்பர், கேடு கெட்ட கறுப்பர் பீடு பெறும் பைந்தமிழின் புகழ் பரப்பும் இதழ்களையா காட்டி கொடுத்தல வேண்டும்! என்னே நந்தமிழர் 'நையாண்டி.

அதிகாரம் உள்ளோர் அனைத்தும் செய்வர் ! அஞ்சா நெஞ்சர் எதிர்த்து நிற்பர் ! இதுதானே உண்மை ! ஆம் !

ஐயா, தாங்கள் இதனால் எள்ளளவும் வருந்துதல் வேண்டா ! தாங்கள் நேரிலே கூறியதுபோல், நாங்கள் உங்களுடனிருந்து உதவ முடியாமற் போயினும், எங்களுள்ளம், உயிர் உங்களிடத்திலே தாம் உள்ளன. வெறுங் கூடுகள்தாம் பற்பல சூழ்நிலையால் இங்கே உள்ளன. ஏதோ உயிர் உள்ளளவும் எங்களால் இயலும் செயல்களைத் தங்களுக்கு உறுதுணையாகச் செய்திட உளம் விழைகிறது!

அன்பன்,
ப. எழில்வாணன், க.மு., கல் இ., பள்ளப்பட்டி.

எதிர்ப்பை எதிர்கொள்வோம் !

மதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு, பெரியீர் தமிழ்நிலம் இதழ் 69 - ஐப் பார்த்தேன். நடுவணரசின் கண்காணிப்பு தங்கள் மீது திருப்பி விடப்பட்டுள்ளது என்ற செய்தி வியப்பளிக்கவில்லை, துயரம் தருகிறது. இருந்தாலும், இடர்ப்பாடுகளிலும், இக்கட்டுகளிலும் வளர்வதுதானே உரிமையுணர்வு. எனவே, நமது கொள்கையில் மாறுபாடு இல்லை யென்றாலும், நம் செயல்பாடுகளில் மிக்க கண்காணிப்புடன் இருக்கவேண்டிய நிலை தோன்றியுள்ளது. ஏனென்றால் கோடாரிக்காம்பாக, இன இரண்டகர்களாக இருக்கும், வயிற்றுப் பிழைப்பையே முதாமையான கொள்கையாகக் கொண்டிருக்கும் இழிதமிழ்ப்பிறவிகளே, காட்டிக் கொடுக்கும் கயமைத் தனத்திற்குத் துணை போகலாம். இன்று வல்லான் வகுத்ததே சட்டமென்று இருக்கின்ற நிலையில்! எது வேண்டுமானாலும் செய்ய முற்படலாம். அதற்காக அச்சப்பட்டுக் கொண்டிருந்தால், அவ்விழி நிலைகளை அழிக்க முடியாதுதான். இருந்தாலும் நாமும் இயன்ற அளவிற்கு அதே சட்டத்தின் துணையை முன்னெடுத்துச் செல்வோம். அதற்குரிய பொருள் தண்டல் தேவைப்பட்டாலும், தமிழ்நிலம், தென்மொழி மூலம் தெரியப்படுத்திப் பொருள் தண்டுவோம். அதற்கு என்னாலான பங்களிப்பைச் செய்ய எப்பொழுதும் அணியமாகவே உள்ளேன். எனவே, சட்ட வல்லுநர்களின் துணைக்கொண்டு இவ்வெதிர்ப்பை எதிர்கொள்வோம் வன்முறையில் தமது கொள்கைகளை நசுக்க முற்படுவார்களானால், அந்நேரத்தில் அதற்கேற்றவாறு திட்டமி

'தமிழ்நிலம்' தாளிகையின் வெளியீட்டு அறிக்கை

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1955 19-ஈ. ஆ. (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம் ... சென்னை
2. கிழமை ஒரு முறை ... கிழமை ஒருமுறை
3. அச்சிடுவோர் பெயர்... திருவாட்டி. மா: தாமரை
   இனம் ... தமிழர்
   முகவரி ... தென்மொழி அச்சகம் சென்னை-5
4. வெளியிடுவோர்
   பெயர் ... திரு. பெருஞ்சித்திரனார்
   இனம் ... தமிழர்
   முகவரி ... தென்மொழி அச்சகம் சென்னை-5
5. ஆசிரியர் பெய்ர் ... திரு. பெருஞ்சித்திரனார்
   முகவரி ... சென்னை-5

ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர்; கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவர்களும்	திரு. பெருஞ்சித்திரனார் சென்னை-5.

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

25—2—86
சென்னை—5

பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

கனைத் திட்டம் செய்வோம். எது எவ்வாறிருந்தாலும் நமது கொள்கைகள் முழக்கப்பட்டேயாகல் வேண்டும். அதற்குத் தன்நலமற்றவர்கள் பணியே தேவை. இன்று தமிழகத்தில் அத்தகையோர் அருகியே காணப்படுகின்றனர். தூய தொண்டில் முன்னிற்பவர் தாங்கள்தாம். எப்பாடு பட்டேனும் உங்களைப் போன்றோர் காக்கப்பட்டேயாகல் வேண்டும். அதற்கு உறுதுணையாகச் சிலரேனும் உறுதியாக இருப்பர். அவர்கள் எரிமலைகளைப் போன்றவர்கள் எரிமலையின் முன்னர் எத்தனை அரண்மனைகள். கோட்டைக்கொத்தளங்கள் இருந்துதாம் என்ன? எனவே, எச்சரிக்கையோடும், இன்னும் வேகத்தோடும், உறுதியோடும் தமிழ்நிலம், தென்மொழியாகிய முரசுகள் மூலம் நமது கொள்கைகள் முழக்கப்பட்டேயாக வேண்டும். அன்பன்,

புலவர். அறிவுடைநம்பி, மூலனூர்,

அரிமாவிற்கு முழக்கமிட அடவியிலே தடையாம் !

விழிதிறந்தால் குற்றம்
விழிமூடினும் குற்றம் -
ஒளிபிறந்த மண்ணில்
உண்மைக்குக் கைவிலங்கு ;

குயிலே பாடாதே
மயிலே ஆடாதே
அலையே புரளாதே
ஆணையிடக் கேட்கலையோ ?

தமிழர்க்குத் தமிழில்பேசத்
தடைபோடும் ஆட்சியடா ;
பறவைக்குச் சிறைவிரிக்க
உரிமையிலை வானகத்தில் !

அரிமாவிற்கு முழக்கமிட
அடவியிலே தடையாம் ?
பாவலர்க்கு விடுதலைக்குக்
குரலெடுக்கத் தடையாம் -

மலைமலையாய் மாலைசூட
மணம்மகிழும் தலைவர்கள்
தலைக்குவிலை வைத்திடவே
தவிடுபொடி ஆகின்றார் -

ஆரவார 'மெய்ச்சீர்த்தி'
அவரவரே எழுதிவைத்துத்
திறப்புவிழா செய்கின்றார்,
திறந்தவீதி உலாவந்தே !

இவரெல்லாம் தமிழினத்தை
ஈடுவைத்து வரும்போது,
சுவரெல்லாம் தம்பெயரை
எழுதிவைத்து மகிழும்போது,

நெருப்புதிரும் என்எழுத்தில்
நெடுமடியும் தீர்ந்தழியும்
விடுதலைக்கே என்மூச்சு
புயல்வடிவம் சேர்த்துவிடும் !

—பறம்பை அறிவன்

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்: 70] பதிவு எண்: TN/MS (C)657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக்
கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள்:
தென்மொழி ந. முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.